www.agaram.lk

FWC

**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**நான்காம் தவணை பரீட்சை - 2022**

# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 4th Term Examination - 2022

| | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்தவம் - I<br>Christianity - I | Two Hours<br>Gr. 13 (2022) | 43 | T | I |

### பகுதி I

❖ **சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை அறிவுறுத்தலுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி இடுக.**

01. திருவிவிலியத்திற்காக பயன்படுத்தப்படும் இலத்தீன் சொல்.
1) செப்துவாஜித் 2) வுல்காத்தா 3) பிபிளுஸ்
4) மசோரடிக் 5) ப்பரபோஸ்

02. எபிரேய திருவிவிலியம் கிரேக்க பேரரசனின் அனுசரணையில் மொழி பெயர்க்கப்பட்டது.
1) கி.மு 10ம் நூற்றாண்டில் 2) கி.பி 6ம் நூற்றாண்டில் 3) கி.மு 3ம் நூற்றாண்டில்
4) கி.பி 3ம் நூற்றாண்டில் 5) கி.மு. 9ம் நூற்றாண்டில்

03. இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட நீதித்தலைவர்களுக்கு வழங்கப்பட்ட இறை ஏவுதல்.
1) எழுதும் இறை ஏவுதல் 2) கட்டளை இறை ஏவுதல் 3) போதனைக்கான இறைஏவுதல்
4) பணி இறை ஏவுதல் 5) ஆயத்துவ இறை ஏவுதல்

04. ஆபிரகாம் நீண்ட காலம் வாழ்ந்த பகுதி
1) எபிரோனை அண்டிய பகுதி 2) ஊரை அண்டிய பகுதி 3) மலையை அண்டிய பகுதி
4) யோர்தானை அண்டிய பகுதி 5) எகிப்தை அண்டிய பகுதி

05. இஸ்ராயேலருக்கு நிரந்தரமான படையொன்றினை வழங்கிய பெருமைக்குரிய அரசன்
1) தாவீது 2) சாலமோன் 3) மோசே 4) சவுல் 5) நெகேமியா

06. சாலமோன் அரசனின் ஆட்சியில் மக்கள் விரத்தியடைந்தமைக்கான காரணங்களில் ஒன்று.
1) அரசியல் அதிகாரம் காணப்பட்டமை.
2) பொருளாதார நெருக்கடி காணப்பட்டமை
3) வயது முதிர்ந்து பலவீனமாக காணப்பட்டமை.
4) அவரின் புதல்வர்கள் கையூட்டு வாங்கியமை.
5) வரியின் சுமை அதிகரிக்கப்பட்டமை.

07. "கில்கமேஸ்" கதையிலுள்ள பல தெய்வ கொள்கையை நீக்கி ஒரே இறைவன் என்னும் கொள்கையூடாக எடுத்துக்காட்டப்படும் கதை.
1) காயீன் ஆபேல் கதை 2) நோவாவின் கதை 3) ஆதாம் ஏவாள் கதை
4) பாபேல் கோபுரக் கதை 5) 1ம் படைப்புக் கதை

08. அறிவுரையாக அமைந்ததும் மோசேயின் போதனைக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டவையுமாக அமைந்த மரபு.
1) E 2) J 3) D 4) P 5) J,D



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

09. இஸ்ராயேல் மக்களின் மிகத்தூய்மையான அடையாளம்.
1) வெண்கலப்பாம்பு 2) மன்னா 3) பலிப்பீடம்
4) உடன்படிக்கை பேழை 5) பாஸ்கா செம்மறி

10. வானத்தையும் பூமியையும் அலங்கரிக்கும் நாட்களாக அமைந்தவை.
1) 1,2,3ம் நாட்கள் 2) 3,4,2ம் நாட்கள் 3) 4,5,6ம் நாட்கள்
4) 1,2,5ம் நாட்கள் 5) 1,3,5ம் நாட்கள்

11. யாவே மரபுக்குரிய இறையியல் கதையாக அமைந்தது.
1) பாபேல் கதை 2) ஆதாம் ஏவாள் கதை 3) படைப்பின் 2ம் கதை
4) பெருவெள்ளக்கதை 5) காயீன் ஆபேல் கதை

12. மீட்பு வரலாற்றுடன் தொடர்புள்ள இறைவனால் தம் சுயவிருப்பத்துடன் தேர்ந்து கொள்ளப்பட்ட முதலாவது நபர்.
1) மோசே 2) ஆரோன் 3) யாக்கோபு
4) ஆபிரகாம் 5) ஏசாயா

13. ஏதோம் இனத்தவரின் தந்தை என்று அழைக்கப்பட்டவர்.
1) யாக்கோபு 2) ஆபிரகாம் 3) ஏசா 4)ஈசாக் 5) பார்வோன்

14. பின்வருவனவற்றைக் கருதுக.
A- நீரிலிருந்து நான் இவனை எடுத்தேன்
B- முதன்மையான இறைவாக்கினராவார்
C- சட்டத்தரணி ஆவார்
D- ஆண்டவரின் பணியாளன்
இவற்றில் மோசேயுடன் தொடர்புடைய கூற்றுக்கள்
1) Aயும் Dயும் 2) Aயும் Bயும் 3) Bயும் Cயும்
4) Cயும் Dயும் 5) Aயும் Cயும்

15. புளிப்பற்ற அப்பத்திற்கான எபிரேயச் சொல்.
1) மட்சா 2) மாசா 3) செகுல்லா
4) கிறிஸ்டோஸ் 5)பாஸ்கா உணவு

16. இஸ்ராயேல் மக்கள் சீனாய் மலை உடன்படிக்கைக்காக ஆயுத்தமான முறைகளைக் குறிக்கும் விடைகளைத் தெரிவு செய்க.
A- வழிபாட்டில் ஈடுபடல்
B- தூய்மையாகுதல்
C- பாஸ்கா உணவு உண்ணுதல்
D- மலையிலிருந்து விலகியிருத்தல்
1) Bயும், Dயும் 2) Aயும், Bயும் 3) Bயும், Cயும்
4) Aயும்,Dயும் 5) Aயும்,Cயும்


Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

17. "பெத்லகேம்" என்னும் ஊரை மீக்கா இறைவாக்கினர் எவ்வாறு அழைத்தார்.

1) அரசதளிர் 2) எப்ராத்தா 3) யேசு பிறந்த ஊர்
4) மீட்பு 5) தாவீது பிறந்த ஊர்

18. திருக்கோவிலில் இறைவனின் பிரசன்னத்தை காட்சியினூடாக அனுபவித்த இறைவாக்கினர்

1) எரேமியா 2) மீக்கா 3) எசாயா 4) ஆமோஸ் 5) எசேக்கியேல்

19. எருசலேம் அழிவுக்குப் பிற்காலத்து நிகழ்வை குறிப்பால் உணர்த்தும் திருப்பாடல்.

1) திருப்பாடல் 23 2) திருப்பாடல் 91 3) திருப்பாடல் 29
4) திருப்பாடல் 51 5) திருப்பாடல் 66

20. யேசு ஓய்வு நாளில் நோயாளரை நலம் பெறச் செய்தல், தொட்டு குணம் பெறச் செய்தல் போன்ற செயலால் எதிர்பார்ப்புக்குள்ளாகியோர்.

A – பரிசேயர்
B – செலஸ்தியர்
C – எஸ்சேனியர்
D – மறைநூல் அறிஞர் மற்றும் சதுசேயர்

1) Aயும், Cயும் 2) Aயும், Bயும் 3) Bயும், Cயும்
4) Cயும், Dயும் 5) Aயும், Dயும்

21. பின்வரும் கூற்றுக்களை கருதுக.

A- இறைத்தூதர்கள் மற்றும் ஆன்மீக வாழ்வு உயிர்த்தெழுதல் பற்றி நம்பிக்கை வைத்தல்
B- பாரம் பரிய சமய சடங்குகளை மிக முக்கியமெனக் கவனித்தல்
C- குருக்களோடு நெருங்கிய உறவு வைத்திருந்த உயர்குல பிரிவினராவர்
D- பாரம்பரிய சமய சடங்குகளை மிகமுக்கியமெனக் கவனித்தல்

இக்கூற்றுக்களில் பரிசேயரின் வாழ்க்கையோடு தொடர்புடைய கூற்றுக்களாக அமைவன

1) A,C,D 2) B,C,D 3) A,B,D 4) A,B,C 5) C,D,B

22. நீரோ போன்ற கொடுர பேரரசர்களின் துன்புறுத்தல்களின் காலத்தில் உயிர்த்தியாகம் செய்த கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு ஆன்மீக ரீதியாக ஆறுதலை பெற்றுக் கொடுக்க எழுதப்பட்ட நற்செய்தி.

1) லூக்கா நற்செய்தி 2) மத்தேயு நற்செய்தி 3)யோவான் நற்செய்தி
4) மாற்கு நற்செய்தி 5) திருத்தூதர் பணி

23. கீழ்வரும் கூற்றுக்களைக் கருத்தில் கொள்க

A- இயேசுவின் அன்பு செய்த சீடன்
B- மாண்புமிகு தியோப்பில் அவர்களுக்கு அர்ப்பணித்து எழுதப்பட்டது
C- இயேசுவின் சில நிகழ்வுகளை கண்களால் பார்த்த சீடனும் நற்செய்தி ஆசிரியரும்
D- விசேட விதமாக யூத மக்களை விளித்து எழுதப்பட்டது

இக்கூற்றுக்களில் லூக்கா நற்செய்தியுடன் தொடர்புடைய கூற்றாய் அமைவது

1) B 2) A 3) D
4) C 5) Aயும் Cயும்



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

24. மேலே தரப்பட்ட கூற்றுக்களில் யோவான் நற்செய்தியுடன் தொடர்புடையதாய் அமையும் கூற்றுக்கள்.

1) Aயும், Bயும் 2) Cயும், Bயும் 3) Aயும், Cயும்
4) Cயும், Dயும் 5) Aயும், Cயும், Dயும்

25. சமநோக்கு நற்செய்தியில் குறிப்பிடப்படாத ஆனால் யோவான் நற்செய்தியில் குறிப்பிடப்படும் அருங்குறிகள்.

1) தண்ணீரை திராட்சை இரசமாக்கல்
2) பெத்சதாவில் உடல் நலமற்றவர் நலமடைதல்
3) பிறவியிலே பார்வையற்றவர் பார்வை பெறல்
4) இலாசரை மரணத்திலிருந்து உயிர்பெறச்செய்தல்
5) மேற்கூறியயாவும் சரியானவை

26. முதல் முறையாக "கிறிஸ்தவம்" என்ற பெயரில் சீடர்கள் அழைக்கப்பட்ட இடம்.

1) எபேசில் 2) பிலிப்பில் 3) கொரிந்தில்
4) சீரியாவின் அந்தியோக்கியாவில் 5) கொலேசில்

27. பவுலும் பர்ணபாவும் இஸ்ராயேல் வரலாற்றை எடுத்துரைக்கும் நீண்ட போதனை ஒன்றை நிகழ்த்தியது.

1) எகிப்தில் 2) செசாரியாவில் 3) எருசலேமில்
4) மிலோத்தில் 5) பிசிதியாவிலிலுள்ள அந்தியோக்கியாவில்

28. எருசலேம் பொதுச்சங்கம் கூட்டப்படும் போது சங்கத் தலைவராக இருந்தவர்.

1) பேதுரு 2) பவுல் 3) யாக்கோபு 4) பர்ணபா 5) பிலிப்பு

29. பவுலின் இடைக்கச்சையை எடுத்து தனது கைகளையும் கால்களையும் கட்டி தூய ஆவியின் வழிகாட்டலுடன் பவுல் எருசலேமில் பிற இனத்தவரால் காட்டிக்கொடுக்கப்படுவார் என தீர்க்கதரிசனம் கூறியவர்.

1) சிமியோன் 2) அகபு 3) சீலா 4) ஆக்கில்லா 5) திமெத்தேயு

30. A- மூன்றாவது பயணத்தின் போது எழுதப்பட்டது

B- அறிவுறுத்தும் வடிவத்தில் அமைந்தது.

C- ஒழுங்கமைப்பு ரீதியான திருமுகம்

D- நீண்ட திருமுகம்

இக்கூற்றுக்கள் பவுலின் எத்திருமுகத்துடன் தொடர்புடையது

1) உரோமையருக்கு எழுதப்பட்ட திருமுகம்.
2) கொரிந்தியருக்கு எழுதப்பட்ட திருமுகம்
3) பிலிப்பியருக்கு எழுதப்பட்ட திருமுகம்
4) பிலமோனுக்கு எழுதப்பட்ட திருமுகம்
5) தெசலோனிக்கேயருக்கு எழுதப்பட்ட திருமுகம்

31. தூய மத்தேயு முன்வைக்கும் ஐந்து போதனைகளில் உள்ளடங்காதவை.

1) சீடர்களின் பாதங்களை கழுவியது 2) மலைப்பொழிவு
3) மறைத்தூதுப்பணி 4) உவமைகள்
5) இறுதிக்காலம்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

www.agaram.lk

32. "கெத்சமனி" என்பதன் எபிரேயச் சொல்.

1) பூங்காவனம்
2) துயரமான இடம்
3) செபித்த இடம்
4) எண்ணெய் இயந்திரம்
5) மரண வேதனைப்பட்ட இடம்

33. யூதரின் மிக உயர்ந்த நீதி மன்றம்

1) செபக்கூடம்
2) பாராளுமன்றம்
3) தலைமைச்சங்கம்
4) உரேமைபேரரசு
5) அசீரிய பேரரசு

34. யேசுவின் சிலுவையின் மேல் எழுதப்பட்ட வாக்கியம்.

1) இவன் யூதரின் அரசன்
2) யூதரின் அரசன் நானே
3) இவன் மெசியா
4) இவர் யூதரின் அரசனாகிய யேசு
5) யூதரின் அரசன்

35. மறுவிறவி பற்றி நற்செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள முதலாவது காரணி

1) மாற்றான் கல்லறை
2) வெறுமையான கல்லறை
3)உயிர்ப்பு
4) விடுதலை
5) மீட்பு

36. கிறிஸ்தவ குடும்பங்கள் பல ஒன்று சேர்ந்து கட்டியெழுப்பிய விசேட குடும்பமே

1) சமூகம்
2) பாடசாலை
3) பங்கு
4) திருச்சபை
5) அரசு

37. கிறிஸ்துவின் தாழ்ச்சியும் மகிமையும் பற்றி குறிப்பிடப்படும் திருவிவிலியப் பகுதி

1) எபேசி 5:11-14
2) கலாத் 5:1-7
3) பிலிப்பியர் 2:5-11
4) பிலிப்பியர் 4:4-11
5) 1 கொரி 13:1-14

38. யேசு சிலுவையை சுமந்து சென்ற இடம்

1) கபால மலை
2) தபோர் மலை
3) ஒலிவ மலை
6) யூதேயாமலை
5) கெத்சமனி தோட்டம்

39. யேசு மாட்சிமையோடு வரும் போது அவரின் வலப்புறம் மற்றும் இடப்புறம் அமரக் கேட்டுக் கொண்ட திருத்தூதர்கள்.

1) பேதுரு, அந்திரேயா
2) பெரிய யாக்கோபு, யோவான்
3) பேதுரு, யோவான்
4) யாக்கோபு,அந்திரேயா
5) எலியா,எலிசா

40. திருப்பலியில் சொல்லப்படும் "விசுவாசிகளின் மன்றாட்டு" வேறு எப்பெயரால் அழைக்கப்படுகிறது

1) இரக்கத்தின் செபம்
2) மன்னிப்பின் செபம்
3) ஆறுதலின் செபம்
4) விசுவாசத்தின் செபம்
5) பரிந்துரைச் செபம்

41. திவ்விய நற்கருணையை ஏற்படுத்துதல் தொடர்பாகப் புதிய ஏற்பாட்டில் உள்ள அறிக்கைகளுள் மிகப் பழைமையான அறிக்கையாக இருப்பது.

1) 1 கொரிந் 13:1-13
2) யோவான் 1:32-34
3) 2 கொரிந் 12:20-24
4) மத்தேயு 3:13-17
5) 1 கொரிந் 11:23-26

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

42. யேசு வாழ்வு தரும் தண்ணீர் பற்றி பேசியது.
    1) நிக்கதேமுடன் 2) தொழுநோயாளருடன் 3) பரிசேயருடன்
    4) சமாரியப் பெண்ணுடன் 5) சதுசேயருடன்

43. கிறிஸ்தவர்களாகிய நாம் எதனால் சோதனைகளை வெற்றி கொள்ளமுடியும்.
    1) முயற்சியினால் 2) கடின உழைப்பினால் 3) செபத்தினால்
    4) கல்வியினால் 5) தலைமைத்துவத்தினால்

44. “இதோ வானம் திறந்திருப்பதையும் மானிட மகன் கடவுளது வலதுபக்கத்தில் நிற்பதையும் காண்கின்றேன்” எனக்கூறியவர்.
    1) பிலிப்பு 2) திருத்தொண்டர் ஸ்தேவான் 3) எசாயா
    4) திருமுழுக்கு யோவான் 5) பவுல்

45. “அப்போலோஜியா” என்பதன் பொருள்.
    1) பாதுகாப்பது 2) பராமரிப்பு 3) விடுதலை அடைதல்
    4) இறைபராமரிப்பு 5) வழிநடத்தல்

46. நீரோவின் கொடிய கலாபனைக் காலத்தில் கொலை செய்யப்பட்டு மறைசாட்சிகளானவர்கள்.
    1) பேதுரு,பவுல் 2) பவுல், பர்ணபா 3) பேதுரு, பர்ணபா
    2) ஜஸ்ரின்,பெலிகார்ப் 5) குருக்கள்,துறவிகள்

47. மிலான் சாசத்தினால் வழங்கப்பட்ட சலுகைகளில் அல்லாதவை.
    1) கிறிஸ்தவ குருக்கள் வரிகளிலிருந்து விடுவிக்கப்பட்டமை
    2) சாவல்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டமை
    3) திருத்தந்தைக்கு இலாத்திரன் மாளிகை மீண்டும் கொடுக்கப்பட்டமை
    4) சிலுவையின் அடையாளம் பேரரசின் உத்தியோக சின்னமாக்கப்பட்டது
    5) பேரரசில் நிர்வாகப் பதவிகள் வகிப்பதற்கு கிறிஸ்த்தவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது

48. “திரிபோவுடன் உரையாடல்” என்னும் நூலை எழுதியவர்.
    1) புனித அகுஸ்தினார் 2) புனித தெர்த்தூலியன் 3) புனித ஜெரோம்
    4) புனித ஒரிஜின் 5) புனித ஜஸ்டின்

49. இறையியல் எழுத்தாளர், மறைவிற்பன்னர், பேச்சாளர், தபோதனர், மொழிவல்லுநர் என திருச்சபை ஏற்றுக் கொண்டது யாரை
    1) தூய பவுல் 2) தூய லூக்கா 3) புனித ஜெரோம்
    4) தூய யோவான் 5) புனித ஒரிஜின்

50. நிசேய திருச்சங்கம் கூட்டப்படுவதற்கு காரணமாய் அமைந்த பேதகம்
    1) மசதோனியப் பேதகம் 2) ஆரிய பேதகம் 3) நெஸ்தோரியப் பேதகம்
    4)பெலாஜிய பேதகம் 5) இயூத்திகப் பேதகம்

(50x2=100 புள்ளிகள்)



agaram.lk

www.agaram.lk

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணை பரீட்சை - 2022
## Conducted by Field Work Centre, Thondaimanaru
## 4th Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்தவம் - II<br>Christianity - II | Three Hours<br>Gr. 13 (2022) | 43 | T | II |

**பகுதி I இல் இரண்டு வினாக்களையும் பகுதி II இல் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

### பகுதி - I

01) (i) இஸ்ராயேலரை ஆட்சி செய்த அரசர்கள் இருவரைத் தருக. (2 புள்ளிகள்)

(ii) நீதித்தலைவர்களின் ஆட்சி பலவீனமடைந்தமைக்கான காரணங்கள் இரண்டு தருக (4 புள்ளிகள்)

(iii) சாலமோன் அரசனின் ஆட்சிக்காலத்தில் இஸ்ராயேலரின் பொருளாதார முறையில் ஏற்பட்ட மாற்றங்கள் மூன்று தருக. (6 புள்ளிகள்)

(iv) நாட்டில் ஒரு நல்லாட்சியை ஏற்படுத்த ஆட்சியாளர்கள் கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கினை விளக்குக. (8 புள்ளிகள்)

02) (i) பழைய ஏற்பாட்டில் நூல் ஆசிரியர்கள் இறைவனையும், மக்களையும் எவ்வாறு சுட்டிக்காட்டுகின்றார்கள் (2 புள்ளிகள்)

(ii) தூய மத்தேயு நற்செய்தியில் ஒரு ஆயனின் கடமைகளாக சுட்டிக்காட்டப்படும் விடயங்கள் 2 தருக? (4 புள்ளிகள்)

(iii) பரிசேயர் இயேசுவின் பணிவாழ்வின் போது அவரில் முன்வைத்த முறைப்பாடுகள் மூன்று தருக. (6 புள்ளிகள்)

(iv) இன்றைய சமூதாயத்தில் கிறிஸ்தவர்களாகிய நாம் யேசுவைப் பின்பற்றும் போது சீடத்துவத்தின் தன்மையைப் பாதுகாக்க எடுக்கும் முயற்சிகள் நான்கைத்தந்து விளக்குக. ( 8 புள்ளிகள்)

03) (i) திருத்தொண்டர்களில் மறையைப் போதிப்பதிலும், திருமுழுக்கு கொடுப்பதிலும் ஈடுபட்டவர்கள் இருவரைத் தருக. (2 புள்ளிகள்)

(ii) பிலிப்பு, சமாரியா நகரில் திருமுழுக்கு கொடுத்த இரு நபர்களைத் தருக. (4 புள்ளிகள்)

(iii) பேரரசன் மாக்சிமியனின் காலத்தில்(கி.பி 235 – 238) கிறிஸ்தவர்கள் முகம் கொடுத்த துன்பங்கள் மூன்றினை விபரிக்குக? (6 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

(iv) இன்று பல்வேறு பொருளாதார நெருக்கீடுகளுக்கு மத்தியில் வாழும் நாம் இறைநம்பிக்கையை வளர்த்துக் கொள்வதோடு திருச்சபையின் சத்தியங்களுக்கு கட்டுப்பட்டு வாழ மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் நான்கை தந்து விளக்குக.

(8 புள்ளிகள்)

## பகுதி - II

04) (i) தூய பவுல் தமது மறைத்தூதுப் பயணங்களின் போது எதிர் கொண்ட சாவல்களை எடுத்துக்கூறி விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) தூய பவுலின் முன்மாதிரிகையைப் பின்பற்றி இன்றைய கிறிஸ்தவ வாழ்வுப் பயணத்தில் வருகின்ற சாவல்களை எவ்விதம் வெற்றி கொள்வீர் என்பதை ஐந்து விடயங்களைத் தந்து விளக்குக. (10 புள்ளிகள்)

05) (i) தூய மத்தேயு நிறைவு காலப்பொழிவின் மூலம் முன்வைக்கப்படும் விடயங்கள் ஐந்தினை விபரிக்குக. (10 புள்ளிகள்)

(ii) கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக ஆயுத்தம் செய்யும் குழுவினருக்கு தலைமை தாங்கத்தக்க விதத்தில் உம்மில் மிளிர வேண்டிய பண்புகள் ஐந்தினை விளக்குக.

(10 புள்ளிகள்)

06) (i) பிற இனத்தவர் மத்தியில் நற்செய்தி பரப்பப்பட்ட விதத்தினை ஆதாரங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

(ii) திருச்சபையின் மறை உண்மைகளுக்கு எதிராக எழுகின்ற சாவல்களுக்கு தைரியமாக எவ்வாறு முகங்கொடுப்பீர் என விளக்குக. (10 புள்ளிகள்)

07) (i) எபேசு திருச்சங்கம் கூட்டப்பட்டதற்கான காரணத்தையும் அதில் எடுக்கப்பட்ட தீர்மாணங்களையும் விளக்குக. (10 புள்ளிகள்)

(ii) ஆரம்ப கால திருச்சபையினரிடத்தில் காணப்பட்ட பண்புகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

08) (i) திருமுழுக்கு என்னும் அருளடையாளத்தின் மூலம் அழைப்பினைப் பெற்றுக்கொள்ளும் கிறிஸ்தவர்களின் கடமைகளையும் பொறுப்புக்களையும் விளக்குக.

(10 புள்ளிகள்)

(ii) உமது ஆற்றல்கள், திறமைகள், சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி சமூதாய வளர்ச்சிக்கு உம்மால் ஆற்றக்கூடிய பிறநலப் பணிகளைத் தந்து விளக்குக. (10 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!